உர விலை உயர்வைத் திரும்பப் பெற வலியுறுத்தல்

First Published : 28 Jun 2012 12:56:52 PM IST

நாகப்பட்டினம், ஜூன் 27: உர விலை உயர்வை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என புதன்கிழமை நடைபெற்ற நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிர்வாக அலுவலர் ஜி. விஜயா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் க. பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

அ. அலெக்ஸாண்டர்: கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால், கரும்பை வெட்ட முடியாத நிலை ஏற்பட்டு, தற்கொலை செய்து கொண்ட மாப்படுகை கரும்பு விவசாயி முருகையனின் குடும்பத்துக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய கொள்முதல் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

சோமு. இளங்கோ: காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புப்படி தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய காவிரி நீரை மத்திய, மாநில அரசுகள் விரைந்து பெற வேண்டும்.

வி. தனபாலன் : கரும்பு விவசாயி முருகையனின் குடும்பத்துக்கு அரசு ரூ. 10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். மேலும்,அவரின் வாரிசுக்கு அரசுப் பணி வழங்க வேண்டும். அவரது கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

கோபி. கணேசன்: ஆற்றுப்பாசனம் கிடைக்காத நிலையில், மும்முனை மின்சாரமும் போதியளவு விநியோகிக்கப்படாததால், குறுவை சாகுபடியை விவசாயிகள் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதற்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

எஸ். சம்பந்தம்: ஓரிரு ஆண்டுகளில் டி.ஏ.பி. உரத்தின் விலை ஏறத்தாழ 3 மடங்கு அதிகரித்துள்ளது. இதேபோல, கலப்பு உரம், பொட்டாஷ் ஆகியன 2 -லிருந்து 3 மடங்கு வரை அதிகரித்துள்ளன. தற்போது பொட்டாஷ் உரத்தின் விலை மேலும் 10 சதம் அதிகரிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, மத்திய அரசு உரங்களின் விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்: குறுவைப் பருவத்துக்குத் தேவையான அனைத்து இடுபொருள்கள், பூச்சிக்கொல்லிகள் போதுமான கையிருப்பு உள்ளன.

தெளிப்பு நீர், மழைத்தூவான பாசனக் கருவிகள், சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படுகின்றன. வடிகால்கள், வாய்க்கால் சீரமைக்கும் பணிகளும், மதகு, தடுப்புகளைச் சீரமைக்கும் பணியும் நடைபெறுகிறது.

விவசாயத்துக்காக தினமும் 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. இதன் மூலம், நாகை மாவட்டத்தில் 24,300 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயப் பணிகளின் தேவைகளை நிறைவு செய்ய மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார் ஆட்சியர் து. முனுசாமி.

## மானாவாரி பருத்தி பயிரிட மண் பரிசோதனை அவசியம்

First Published : 28 Jun 2012 01:00:48 PM IST

பெரம்பலூர், ஜூன் 27: பெரம்பலூர் மாவட்டத்தில், மானாவாரி பருத்தி சாகுபடி செய்வதற்கு மண் பரிசோதனை அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து வெளியிட்ட செய்திக்குறிப்பு:

எங்கள் அறிவியல் மையமானது, பருத்தி சாகுபடியில் ஏற்படும் பிரச்னைகள் குறித்து பல்வேறு ஆய்வுகளைச் செய்கிறது.

இந்த ஆய்வுகளின் முடிவுப்படி, மானாவாரிப் பருத்தி பயிருக்கு மண் பரிசோதனை மிகவும் அவசியமாகும். பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி பயிரிடும் கரிசல் மண் வகை அதிகளவிலும், செம்மண் வகை ஒரு சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

மண் பரிசோதனை செய்யும்போது, மண் ஆய்வக வல்லுநர்கள் வயலில் தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்டச் சத்து என்னென்ன அளவுகளில் உள்ளன, எதிர் வரும் பருவத்தில் பயிரிட உள்ள பயிருக்கு எவ்வளவு உரம் தேவை என்பதைத் தெளிவாக கண்டறிந்து அறிக்கை தருவர்.

இதன்படி பயிருக்கு உரமிடும்போது பயிர் செழிப்பாகவும், தேவையில்லாத உர செலவு குறைவு, மண்ணின் தரம் கெடுவதையும் தவிர்க்க முடியும்.

மேலும், ஏக்கருக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரையிலான உரச் செலவைக் குறைந்து, குறைந்த செலவில் அதிக வருமானமும் பெற முடியும்.

மேலும் தழைச் சத்தான யூரியாவை பருத்திப் பயிருக்கு அதிகளவில் இடும்போது, பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிகளவில் தாக்கி, சேதத்தை ஏற்படுத்துவதுடன், அதைக் கட்டுப்படுத்த அதிகளவில் பூச்சி மருந்து தெளிப்பதால் செலவு கூடுவதுடன் மகசூல் குறைந்து, குறைந்த வருமானமே பெற முடியும்.

எனவே, எதிர் வரும் பருவத்தில் பருத்தி பயிரிடும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதிக லாபம் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு, வேளாண் அறிவியல் மையத்தை நேரிலோ அல்லது 04328-293251, 293592, 292365 ஆகிய எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்.

## 74 ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்

First Published : 28 Jun 2012 11:11:43 AM IST

மானாமதுரை, ஜூன் 27: சிவகங்கை மாவட்டத்தில் 74 ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் நடைபெற்று வருவதாக ஆட்சியர் ராஜாராமன் தெரிவித்தார்.

ஒக்கூர் ஊராட்சியில் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் பட்டுப்புழு வளர்ப்பை அதிகப்படுவத்துவது தொடர்பான கருத்தரங்குக் கூட்டம் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி ஆட்சியர் ராஜாராமன் பேசியதாவது:

மாநில, மத்திய பட்டு வாரியத்தின் மூலம் நவீன தொழில்நுட்பத்துடன் பட்டுப்புழு வளர்ப்புக் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கங்கள் மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் வங்கியாளர்கள், விவசாயிகள் முன்னிலையில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தன. ஆனால் தற்போது இத் தொழில் குறைந்த நிலையில் உள்ளது. இதை விரிவுபடுத்த விவசாயிகள் கவனத்துடன் செயல்படுவதன் மூலம் சிவகங்கை மாவட்டம் பட்டுப்புழு வளர்ப்பில் சிறப்புடன் திகழ முடியும். தற்போது பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் நவீன தொழில்நுட்பத்துடன் மூன்றாம்கட்ட புழுக்கள் விவசாயிகளுக்கு நேரடியாக வளர்க்க கொடுக்கப்படுகின்றன. சிவகங்கை மாவட்டத்தில் 74 ஏக்கர் பரப்பளவில் 42 விவசாயிகள் பட்டுப்புழு வளர்த்து வருகின்றனர்.

மேலும் விவசாயிகள் ஆர்வமுடன் செயல்பட வேண்டும் என்பதற்காக ஆத்மா திட்டத்தின் மூலம் 113 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு இவர்கள் பிற மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மையங்களில் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சியும் அதன்மூலம் கிடைக்கக்கூடிய லாபங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டதன் மூலம் 66 விவசாயிகள் பட்டுப்புழு வளர்க்க உடனடியாக முன்வந்துள்ளார்கள்.

பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தை விவசாயிகள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். ஒரு விவசாயி இரண்டு ஏக்கரில் பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் முதல் ரூ.1.25 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். இதற்கு ஒரு ஏக்கரில் மல்பெரி செடிகள் வளர்ப்பதற்கு அரசு மானியமாக ரூ.4125 வழங்குகிறது என்றார்.

கருத்தரங்கில் முன்னோடி விவசாயி ஒருவருக்கு மானியத் தொகை ரூ.10,312- க்கான காசோலையை ஆட்சியர் வழங்கினார். தொடர்ந்து பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மையத்தின்

விஞ்ஞானிகள் டேனியல், மோகன் ஆகியோர் பட்டுப்புழு வளர்ப்பு பொருளாதார முன்னேற்றம் குறித்து கருத்துரை வழங்கினர்.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியத் தலைவர் பாஸ்கரன், ஒக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜா, பட்டு வளர்ச்சித்துறை மண்டல இயக்குநர் முருகன், உதவி இயக்குநர் நடராஜன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் கருணாகரன், முன்னோடி வங்கி கடன் ஆலோசகர் கிருஷ்ணன், சிவகங்கை ஸ்டேட் வங்கி துணை மேலாளர் சுரேஷ், மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி கண்ணதாசன், மாவட்ட புதுவாழ்வு திட்ட இயக்குநர் போஸ் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## மீன்களை பதப்படுத்துவதில் சிக்கல்

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:20 IST

செய்யூர்:மீன்களை கடப்பாக்கம் பகுதியில், போதிய ஐஸ் கட்டிகள் கிடைக்காததால், மீன்களை பாதுகாக்க முடியாமல், மீனவர்கள் அவதிப்படுகின்றனர்.இடைக்கழிநாடு பேரூராட்சியில், கடப்பாக்கம் குப்பம், தண்டுமாரியம்மன் குப்பம், ஊத்துக்காட்டம்மன் குப்பம், ஆகிய மீனவ குப்பங்கள் உள்ளன. இங்கு, 5,000க்கும் மேற்பட்ட மீனவர்கள் வசிக்கின்றனர். இவர்கள், 12 விசைப்படகுகள், 200 பைபர் படகுகள், 60 கட்டுமரம், ஆகியவற்றில் சென்று மீன் பிடிக்கின்றனர். இக்கடல் பகுதியில், வஞ்சிரம், வவ்வால், காணாங்கெழுத்தை, வரிப்பாறை, இறால், பச்சைகுட்டி, சுறா, நண்டு, போன்றவை பிடிபடுகின்றன.

"ஐஸ்' பற்றாக்குறை

கடலில் பிடிக்கும் மீன்களை, மீனவர்கள் அருகில் உள்ள கிராமங்களுக்கு ஆட்டோவில் கொண்டு சென்று விற்கின்றனர். வந்தவாசி, திண்டிவனம், கல்பாக்கம், புதுச்சேரி பகுதி வியாபாரிகள், நேரில் வந்து மீன்களை வாங்கிச் செல்கின்றனர். விற்பனையாகாத மீன்களை பதப்படுத்த, போதிய அளவு ஐஸ் கட்டிகள் கிடைப்பதில்லை. மீனவர்கள் ஐஸ் வாங்க, 20 கி.மீ., தொலைவில் உள்ள, மரக்காணம் சென்று வருகின்றனர். இதனால் கால விரயமும், பொருட்செலவும் ஏற்படுகிறது.

அரசு உதவி தேவை

இதுகுறித்து ஊத்துக்காட்டம்மன் குப்பத்தை சேர்ந்த பஞ்சநாதன் கூறும்போது, "மீன்பிடி தடைக்காலம் முடிந்துள்ளதால், அதிக அளவில் மீன்கள் கிடைக்கின்றன. மீன்களை பதப்படுத்தி வைக்க ஐஸ் கட்டிகள் ÷தவை. இப்பகுதியில் ஐஸ் தயாரிப்பு தொழிற்சாலை எதுவும் இல்லை. நான்கு கி.மீ., தொலைவில், கடப்பாக்கத்தில் இயங்கி வந்த ஐஸ் தயாரிப்பு தொழிற்சாலையும், மின் தட்டுப்பாடால் மூடப்பட்டுவிட்டது. தற்போது மரக்காணத்திற்கு சென்று, 50 கிலோ ஐஸ் கட்டிகளை, 90 ரூபாய் கொடுத்து வாங்கி வருகிறோம். அவற்றை கொண்டு வர ஆட்டோவிற்கு, 100 ரூபாய் செலவாகிறது,' என்றார்.மீன்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, ""கடப்பாக்கத்தில் மீன்கள் இறக்கு தளம் அமைக்கப்படும் என, முதல்வர் அறிவித்துள்ளார். மீன் இறக்கு தளம் அமைக்கும்போது, மீனவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்," என்றனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:22 IST

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. பல இடங்களில், பலத்த காற்று காரணமாக, மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்தன.காஞ்சிபுரம் மாவட்டத்தில் ÷நற்றுமுன்தினம் மாலை பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக, கேளம்பாக்கத்தில் 49 மி.மீ., மழை பதிவானது. செங்கல்பட்டில் 46 மி.மீ., உத்திரமேரூரில் 23 மி.மீ., தாம்பரத்தில் 20.10 மி.மீ., காஞ்சிபுரத்தில் 12.10 மி.மீ., மாமல்லபுரத்தில் 9.40 மி.மீ., கல்பாக்கத்தில் 4 மி.மீ., மழை பதிவானது.

டோல்கேட் பகுதியில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.மணிமங்கலம்-கரசங்கால் சாலையில், நான்கு புளிய மரங்கள் காற்றில் சரிந்து விழுந்தன.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறையினர் மரங்களை அகற்றி, போக்குவரத்தை சரி செய்தனர். சேத்துப்பட்டு கிராமத்தில், இரண்டு மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன.

சுங்குவார்சத்திரத்தில் மின்சார டிரான்ஸ்பார்மர் சரிந்து விழுந்ததால், அப்பகுதியில் மின்தடை ஏற்பட்டது.படப்பை கல்யாண் நகரில், புதிதாக கட்டிய சுவர் சரிந்து விழுந்ததில், அப்பகுதியைச் சேர்ந்த பொன்னம்பலம், 17, கீர்த்தனா, 18, ஆகியோர் காயமடைந்தனர்

## விலையில்லா கறவை பசுக்களுக்கு பரிசோதனை முகாம்

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,01:06 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர்:இலவசமாக வழங்கிய கறவை பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம், ஜூலை 7ம் தேதி நடக்கிறது.வறுமைக்கோட்டிலிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, மாவட்டத்தில், 950 விலையில்லா கறவை பசுக்கள், 3,418 ஆடுகள், கடந்தாண்டு வழங்கப்பட்டுள்ளன.நடப்பாண்டில், 950 கறவை பசுக்கள், 22,564 ஆடுகள் கொள்முதல் செய்து வழங்கும் பணி நடக்கிறது.இவ்வாறு வழங்கப்பட்ட மாடுகள், ஆடுகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு, கடந்த, ஏப். மாதம் பரிசுகள் வழங்கப்பட்டன.கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனைப் பெருக்கவும், ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், ஜூலை 7ம் தேதி, மாவட்டம் முழுவதும் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை, ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது.பயனாளிகள் இதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கேட்டு கொண்டுள்ளார்.

## உரம், விதைகள் இல்லை; மனு கொடுத்தால் பதில் இல்லை

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,01:06 IST

திருவள்ளூர்:""வேளாண்மை விற்பனை மையங்களில் உரம், விதைகள் இருப்பு இல்லாததால், தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் புகார் அளித்தால், துறை அதிகாரிகளிடம் இருந்து பதில் வருவதில்லை,'' என, விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் சரமாரியாக புகார் தெரிவித்தனர்.மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்

கூட்டம், கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி தலைமையில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் விசாகன், வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசலு உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.அரி (பொன்னேரி): மீஞ்சூர், பொன்னேரியில் விதை நெல் கிடைப்பதில்லை. மீஞ்சூரில் உள்ள விதை வேளாண்மை விற்பனை நிலையத்தை பொன்னேரிக்கு மாற்ற வேண்டும்.சீனிவாசலு (இணை இயக்குனர்): வேளாண்மை விரிவாக்க மையம் மூலம், 17 சதவீதம் மட்டுமே விதை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் விதை தேவைப்பட்டால், தனியார் மற்றும் கூட்டுறவு சங்கம் மூலம் விற்பனை செய்யப்படும்.

(தனியார் மூலம் விதை விற்பனை செய்யக்கூடாது என, பல விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். விதை விற்பனை மூலம் பயன் பெறுவது தனியார் தான் என கோஷமிட்டனர். இதையடுத்து, கூடுதல் விதைகள் தேவைப்பட்டால், வேளாண்மை விரிவாக்க மையம், கூட்டுறவு சங்கம் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதாக இணை இயக்குனர் தெரிவித்தார்.)

வாசு: மத்திய அரசு கொண்டு வந்த விவசாயிகளுக்கான ஆத்மா திட்டம் எப்பொழுது செயல்படும்?

இணை இயக்குனர்: கடந்த, 2005ல் கொண்டு வந்த ஆத்மா திட்டம், அங்கு ஊழியர் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக முறையாக செயல்படவில்லை. விரைவில் இத்திட்டம் செயல்படும்.

மூர்த்தி (அரியப்பாக்கம்): இயற்கை பாதிப்பால் தோட்டக்கலை பயிர்கள் அனைத்தும் சேதமடைந்து விட்டன. அரசின் நிவாரணம் வழங்க வேண்டும். மேலும், எந்த புகார் மனு அளித்தாலும், அதிகாரிகளிடம் இருந்து பதில் வருவதில்லை.நந்தகுமார் (தடப்பெரும்பாக்கம்): தடம்பெரும்பாக்கம் ஏரி மதகினை சீரமைக்க வேண்டும். (இதற்கு அதிகாரிகள் தரப்பில், மதகினை சீரமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பியதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.)ஏரி சீரமைப்பு பெயரில் கொள்ளைபொன்னேரி அடுத்த, ஆமூர் ஏரி, சென்னங்காரணி ஏரி உள்ளிட்ட ஏரிகளில் வரத்து கால்வாயை சீரமைத்து தர வேண்டும் என, தாரகராமன் கூறினார். விவசாயி நடராஜன், "வடக்குநல்லூர் ஏரியில் ஆக்கிரமிப்பு உள்ளது' என்றார். மகேஷ் என்பவர் கூறும்போது, "மாவட்டம் முழுவதும் உள்ள ஏரிகளின் நிலை இது தான். ஏரி சீரமைப்பு என்ற பெயரில் கொள்ளை நடக்கிறது. நபார்டு மூலம் சீரமைக்கப்படும் ஏரிகளை கலெக்டர் நேரில் ஆய்வு செய்து, முறையாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

## 1,100 பசுமை வீடுகள் தயார்: அமைச்சர் தகவல்

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:10 IST

கள்ளக்குறிச்சி : மாவட்டத்தில் பசுமை வீடுகள் திட்டத்தின்படி, ஆயிரத்து 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சண்முகம் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி அடுத்த கல்வராயன்மலையில் நேற்று காலை கோடை விழா துவங்கியது. விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தமிழக வணிகவரித்துறை அமைச்சர் சண்முகம் பேசியதாவது :

கல்வராயன்மலையில் உள்ள மலைவாழ் மக்கள் அரசின் திட்டங்களை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்கு கோடை விழா நடத்தப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் பசுமை வீடுகள் திட்டத்தின்படி, ஆயிரத்து 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள் ளது. கோலியனூர் ஒன்றியத்தில் பசுமை வீடுகள் திட்டத்தை பார்வையிட்ட மத்திய அரசு குழுவினர் பாராட்டிவிட்டுச் சென்றனர்.

தாய் திட்டத்தில் 43 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பில் 186 கிராமத்தில் ஊரக வளர்ச்சி முகமை மூலம் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு லட்சத்து 3,053 பேருக்கு இலவச மிக்சி, கிரைண்டர், பேன் ஆகியவையும், 3,600 மாணவ, மாணவிகளுக்கு லேப்- டாப் மற்றும் ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு கறவை மாடுகள், தாலிக்கு தங்கம் உள்ளிட்ட நலஉதவிகள் அளிக்கப்பட்டுள்ளது.
முதல்வர் ஜெ., உத்தரவின்படி கள்ளக்குறிச்சியில் மின் பகிர்மான வட்ட அலுவலகம், அரசு கலைக் கல்லூரி, சங்க ராபுரத்தில் பாலிடெக் னிக், சின்ன சேலத்தில் தீயணைப்பு நிலையம் உள்ளிட்டவை அமைக் கப்பட்டுள்ளது.

## செயல்படாத ஒழுங்குமுறை விற்பனை கூடத்தால் விவசாயிகளுக்கு பயனில்லை

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,03:05 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை தர்மபுரி விற்பனை குழு சார்பாக, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 2010-2011ம் ஆண்டில் மா குளிர்பதன கிடங்கு வணிக வளாகம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியவை ஒரு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டது.
இதில், 50 எம்.டி., குளிர்பதன கிடங்கு, 13 கடைகள் அடங்கிய நுகர்வோர் வணிக வளாகம், ஏலக்கொட்டகை, தரம் பிரிக்கும் அறை, ஊரக வணிக மையம் சேமிப்பு கிடங்கு, இடுபொருள் கடை வங்கி கட்டிடம், அலுவலக கட்டிடம் ஆகியவை கட்டப்பட்டது.

இப்பணிகள் முடிக்கப்பட்டு, கடந்த 2011ம் ஆண்டு பிப்ரவரி 27ம் தேதி, அப்போதைய வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் திறந்து வைத்தார். இதில், தற்போது மா குளிர்பதன கிடங்கு மட்டுமே செயல்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒழுங்குமுறை விற்பனை கூடம், இதுவரை செயல்படாமல் உள்ளது. விவசாயிகளின் நலனுக்காக கட்டப்பட்ட இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடம் செயல்படாததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை, உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## "ஈடில்லா ஈமு' புத்தகம் ஈரோட்டில் வெளியீடு

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:44 IST

ஈரோடு: ஈரோடு விதை வெளியீட்டின் சார்பில், எழுத்தாளர் மணிகிருஷ்ணா, ஈமு கோழி குறித்து பல்வேறு தகவல் அடங்கிய, "ஈடில்லா ஈமு' என்ற தலைப்பிலான புத்தகத்தை எழுதினார்.
இந்த புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி, சுசீ ஈமு நிறுவனத்தில் நடந்தது. சுசி ஈமு குழுமத்தலைவர் குரு தலைமை வகித்தார். விதை வெளியீட்டின் உரிமையாளர் மணிகிருஷ்ணா வெளியிட, குரு புத்தகத்தை பெற்றுக் கொண்டார். சுசி ஈமு நிறுவன மேலாளர் கிரி, சுசி லேண்ட் புரமோட்டர்ஸ் நிறுவன மேலாளர் பார்த்திபன், பழனிசாமி, மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.
மணிகிருஷ்ணா கூறுகையில், ""ஈமு கோழி வளர்ப்போருக்கு, இந்த புத்தகம் வழிகாட்டியாக இருக்கும். ஈமு வளர்க்கும் பண்ணையாளர்கள் அனுபவம், கோழி வளர்ப்பில் உள்ள புதிய தகவல்கள் இடம் பெற்றுள்ளது. ஈமு கோழி குறித்த உண்மை நிலவரமும் இதில் இடம் பெற்றுள்ளது," என்றார்.

## டான்ஃபெட் மூலம் மஞ்சள் கொள்முதல் துவக்கம்

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:44 IST

ஈரோடு: தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்ஃபெட்), ஈரோடு வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகியவை சார்பில் மஞ்சள் கொள்முதல் திட்ட துவக்க விழா நேற்று நடந்தது.
தமிழக அரசு ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் விவசாயிகளிடம், கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம், மஞ்சள் குவிண்டால், 4,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்யும் திட்டத்தை அறிவித்தது. இதன்படி, ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு, சத்தி, கோபி ஆகிய இடங்களில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.
ஈரோட்டில் நடந்த துவக்க விழா, கருங்கல்பாளையத்தில் உள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்தது. விவசாயிகளுக்கு பயனாளிக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.
தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராபார்ட் வின்சென்ட் கூறுகையில், ""ஈரோடு மாவட்டத்தில், 12 ஆயிரம் ஹெக்டரில் சாகுபடி செய்த மஞ்சளின் அறுவடை பணி முடிந்துள்ளது. இதுவரை, 1,500 விவசாயிகளுக்கு பயனாளிகளுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, விருப்பமுள்ள விவசாயிகளுக்கு கொள்முதல் செய்வதற்கான

அடையாள அட்டை வழங்கப்படும்," என்றார்.
கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பிரபு, மாநகராட்சி துணை மேயர் பழனிசாமி, டான்ஃபெட் மண்டல மேலாளர் மாதேஸ்வரன், கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் செந்தில்குமார், டான்ஃபெட் மண்டல மேலாளர் மாதேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.

## அரசின் மஞ்சள் கொள்முதல் நிலையம் விவசாயிகளுக்கு பல நிபந்தனை விதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:44 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் அரசு மஞ்சள் கொள்முதலுக்கு செய்ய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, சத்தி, கோபி ஆகிய இடங்களில், டான்ஃபெட், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை மூலம், மஞ்சள் குவிண்டால், 4,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்யும் திட்டம் நேற்று முதல் துவங்கியது.
இத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யவும், பயனாளிகளாகவும் விவசாயிகளுக்கு பல்வேறு விதிமுறைகள், நிபந்தனைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
கொள்முதல் செய்வதில், குவிண்டலுக்கு, 4,000 ரூபாய் விலையில், மாநில அளவில் 35 ஆயிரம் மெ.டன் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தின் நபர்களிடம் இருந்து வாங்கும் உச்ச அளவு 15 குவிண்டாலாகும்.
கொள்முதலுக்கு முன்பாக, வருவாய் மற்றும் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலைத் துறையினரால் வழங்கப்படும் அடையாள அட்டை, சிட்ட அடங்கல், ரேஷன்கார்டு நகல், தரச்சான்று, உறுதிமொழி படிவம் ஆகியவற்றை விவசாயிகள் வழங்க வேண்டும்.
திரண்ட மஞ்சள் தரமாக இருக்க வேண்டும். வெளிப்புறம் மிகவும் கடினமாக இருத்தல் வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். பாலிஷ் செய்திருக்க வேண்டும்.
மஞ்சளின் ஈரப்பதம், 12 சதவீதத்துக்கு குறைவாக இருக்க வேண்டும். மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டிருக்க கூடாது. மஞ்சள் மூட்டைகளில் கல், மண் மற்றும் மரத்தூள் ஆகியவை கலந்திருக்கக் கூடாது.
மஞ்சள் நீளம், 30 மி.மீ.,க்கும் அதிகமாக இருக்க வேண்டும். முறிந்துபோன மஞ்சள் மொத்த எடையில், 10 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்க கூடாது.
மஞ்சள் தனது சுயவாசனை உள்ளதாக இருக்க வேண்டும். துர்நாற்றம் உள்ளதாக இருக்க கூடாது. செயற்கை பொருட்களால் வண்ணம் தீட்டப்பட்டிருக்க கூடாது, என விதிகள் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு லட்சம் டன் உணவு உற்பத்தி சாதனை: கரூர் மாவட்ட கலெக்டர் பெருமிதம்

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,02:56 IST

கரூர்: ""கடந்த ஆண்டு மொத்த பயிர் சாகுபடியான 80 ஆயிரம் ஹெக்டேரில் பயிர் செய்து, உணவு உற்பத்தியில் ஒரு லட்சம் டன் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது,'' என கரூர் கலெக்டர் ÷ஷாபனா பேசினார்.கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் ÷ஷாபனா பேசியதாவது:

கடந்த ஆண்டு மொத்த பயிர் சாகுபடி 80 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு உணவு உற்பத்தி ஒரு லட்சம் டன் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. பயிறு வகைகளில் 12 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி செய்து, 80 ஆயிரம் டன் மகசூல் பெறப்பட்டது. எண்ணெய் வித்துக்கள் 17 ஆயிரம் ஹெக்டேர் பயிர் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளின் தேவைக்காக 3,548 டன் உரம் கையிருப்பில் உள்ளது. 808 டன் யூரியா, 486 டன் டி.ஏ.பி., 817 டன் பொட்டாஷ், 2,237 டன் என்.பி.கே., உரங்கள் உள்ளது. தோட்டக்கலை துறை சார்பில் கடந்த ஆண்டு 19 ஆயிரத்து 856 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் பழ நாற்றுகள் மற்றும் தக்காளி, கத்திரி, வெண்டை முதலிய காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. அதேபோல் தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்துடன் சொட்டு நீர்பாசன கருவிகள் வழங்கப்படுகின்றன.

கோரை சாகுபடியை பெருக்கவும், விவசாயிகளுக்கு உதவும் வகையில் கோரை வியாபாரம் சார்ந்த வியாபாரிகள், வல்லுநர்களுடவ் முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. கோரை மற்றும் வாழைநார் விவசாய குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சப்பட்டி துணை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சென்ற பருவத்தில் 13 லட்சம் ரூபாய் மதிப்பில் 42 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகள் விற்பனை செய்யப்பட்டு, 140 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். வேளாண் பொறியியல் துறை சார்பில் 2 மண் தள்ளும் இயந்திரங்கள், 2 நெல் அறுவடை இயந்திரங்கள், பாறை தகர்க்கும் கரவி, கைத்துளை கருவிகளும் குறைந்த வாடகையில் விவாசயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 50 சதவீதம் மானியத்தில் பண்ணை கருவிகள் வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் பேசினார்.

## கொப்பரை கொள்முதல் விலை சரிவால் விவசாயிகள் தவிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,01:13 IST

விருதுநகர்:விருதுநகரில் தேங்காய் விலை சரிவால் ,குறைந்த பட்ச ஆதாரவிலை கிடைக்காமல், விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.இதன் தீர்வாக கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் முக்கிய விவசாயமாக தென்னை உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதிகளான வத்திராயிருப்பு, கிருஷ்ணன்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேத்தூர், தேவதானம் போன்ற பகுதிகளில் அதிகளவில் தென்னை மரங்கள் உள்ளன. தென்னைகளில் பல வித நோய்களால் பாதிக்கப்பட்டாலும், அதை விவசாயிகள் உரம், பூச்சி மருந்துகள் தெளித்து காப்பாற்றுகின்றனர். இதற்கென முதலீடு ,தேங்காய் அறுவடைக்கு கூலி என, விவசாயிகள், தேங்காய் உற்பத்திக்கு அதிகளவில் செலவு செய்கின்றனர். இருந்தும் அரசானது, நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலையாக, ஒரு காய்க்கு ரூ.4.50 க்கு கொள்முதல் செய்கிறது. தனியார் வியாபாரிகளோ, அடிமாட்டு விலையாக ஒரு காய்க்கு ரூ.2.20 க்கு கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கின்றனர். கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க விவசாயிகள், மாவட்ட நிர்வாகத்திற்கு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க முன் வரவில்லை. விவசாயிகள் சங்க செயலாளர் விஜயமுருகன் , ""விவசாயிகள் பாடுபட்டு தென்னை உற்பத்தி செய்கின்றனர். ஆனாலும் குறைந்த பட்ச ஆதார விலை கூட கிடைக்கவில்லை. வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். நூறு தேங்காய்களுக்கு லாபக்காய்கள் என 12 தேங்காய்களை, ஓசியாக வேறு வியாபாரிகள் எடுத்து கொள்கின்றனர். இது தவிர விற்பனை கமிஷன் என பெரும் தொகையையும் இழக்க வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் உள்ளனர். இதன் மீது அரசு நடவடிக்கை எடுத்து ,மாவட்டத்தில் கொப்பரை கொள்முதல் மையம் அமைக்க முன் வர வேண்டும்,'' என்றார்.

## ரசாயன உரம் கடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் :வேளாண் அதிகாரி எச்சரிக்கை

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2012,01:03 IST

தென்காசி : "விவசாயத்திற்கான ரசாயன உரங்களை கடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியம் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ""விவசாய உபயோகத்திற்காக ரசாயன உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது.

நேரிடை விவசாய உபயோகத்திற்கு மட்டுமின்றி தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கலவை உரங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டும் மானிய உரங்களை மூலப்பொருட்களாக பயன்படுத்தலாம். இதுதவிர மற்ற உபயோகங்களுக்கு மானியத்தில் வழங்கப்படும் உரங்களை பயன்படுத்துவது உரக்கட்டுப்பாட்டு ஆணையினை மீறிய செயலாகும். மானியத்தில் வழங்கப்படும் யூரியாவினை மூலப்பொருளாக காகிதம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள், பிவிசி பைப்புகள், கதவுகள் தயாரிக்கும் நிறுவனங்கள், மாட்டு தீவனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் உள்ளிட்டவைகளில் பயன்படுத்துவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தொழிற்சாலை உபயோகத்திற்கென உரங்களை பயன்படுத்துவோர் டெக்னிக்கல் கிரேடு யூரியாவினை பயன்படுத்திக் கொள்ளலாம். இதர மானிய உரங்களான டி.ஏ.பி., பொட்டாஷ் உரங்களை தொழிற்சாலை முகவர்களிடமிருந்து முழு விலையில் வாங்கி உபயோகப்படுத்தலாம். மாநிலங்களுக்கிடையே எந்த நபரும் உரங்களை மாறுதல் செய்ய இயலாது. அவ்வாறு செய்தால் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணையினை மீறிய செயலாகும். வேளாண்மை ஆணையகரத்தில் உரிமம் பெற்ற உற்பத்தியாளர்கள் மட்டுமே தமிழகத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி மாறுதல் செய்ய இயலும். அதிலும் நமது மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்த அளவினை மற்ற மாநிலங்களுக்கு மாறுதல் செய்ய கூடாது. சட்டத்திற்கு புறம்பாக அண்டை மாநிலங்களுக்கு ரசாயன உரங்களை கடத்துதல் மற்றும் தொழிற்சாலை உபயோகத்திற்கென உரங்களை பயன்படுத்தினால் அத்தியாவசிய பொருள் சட்டம் 1955ன் படி ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்" என வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

தினகரன்

## உணவு பொருள் பதப்படுத்த பெண்களுக்கு சிறப்பு பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-06-28 11:39:14

நெல்லிக்குப்பம், : நெல்லிக்குப்பம் அடுத்த மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி கிருஷா அறக்கட்டளை தொண்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு உணவு பொருள் பதப்படுத்தும் முறை பற்றிய சிறப்பு பயிற்சி முகாம் பேரூராட்சி சமுதாய கூடத்தில் நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி தலைவர் அர்ச்சுனன் தலைமை தாங்கினார். கிருஷா அரக்கட்டளை

றிறுவனர் திருசங்கு வரவேற்றார்.
விழுப்புரம் கவின் அறக்கட்டளை நிறுவனர் கவின்ராஜ் முன்னிலை வகித்தார். விருத்தாசலம் அறிவியியல் ஆராய்ச்சி நிலையம் தொழில் நுட்ப பேராசிரியர் டாக்டர் கண்ணன் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு உணவு பொருள் பதப்படுத்தும் முறை பற்றி விளக்கி பேசினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர்கள் பாபு, கண்ணன், நவாப், மேல்பட்டாம்பாக்கம் மகளிர் சுய உதவி குழுக்களின் கூட்டமைப்பு தலைவி விமலா, கிருஷா அறக்கட்டளை அறங்காவலர் ஜெயகாமராஜ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன், அண்ணாகிராம ஒருங்கிணைப்பாளர் சித்ரா மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## துவரை சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம் வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-06-28 10:34:39

நாமக்கல்,: துவரை சாகுபடியில் அதிக மகசூல் பெற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் விளக்கம் அளித்துள்ளார்.
இது குறித்து நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:
நாமக்கல் வட்டாரத்தில், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, வேளாண் துறை மூலம் மானியம் வழங்கப்பட உள்ளது. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, நாற்றங்கால் அமைத்து, துவரை செயல் விளக்கத்திடல்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, ௹15 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளது.
அதற்கு, நீண்டகால ரகங்களான வம்பன் 2, கோ 6 ஆகிய ரகங்களை பயிரிட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு, 2 முதல் 5 கிலோ விதை போதுமானது. 2 சதவீதம் கால்சியம் குளோரைடுடன் விதை நேர்த்தி செய்து, ஏழு மணி நேரம் நிழலில் உலர வைக்கவும்.
பின், உயிர் உரங்களான ரைசோபியம் மற்றும் பாஸ்போபேக்டீரியா ஒரு கிலோ விதைக்கு, 50 கிராமுடன் விதை நேர்த்தி செய்யவும். வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த, டிரைக்கோ டெர்மா விரிடி 4 கிராம் ஒரு கிலோ விதையுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
நேர்த்தி செய்த விதையை, 4க்கு 2 என்ற அளவுள்ள பாலிதீன் பைகளில் 2 விதைகள் விதைக்க வேண்டும். பாலிதீன் பைகளை ஒரு பாகம் செம்மண் ஒரு பாகம் மணல், ஒரு பாகம் மக்கிய தொழுவுரம் ஆகியவற்றை கலந்து முக்கால் பாகம் நிரப்பவும். பையின் அடிபாகத்தில் நீர் வடிவதற்கு 3 அல்லது 4 துளைகள் இட்டு, நீர் தேங்கா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.
30 முதல் 40 நாட்கள் வயதுடைய நாற்றுகளை வயலில் நடவு செய்யலாம். நடவு வயலில், 5 மூன்று அடி இடைவெளியில், 6 இஞ்ச் குழி எடுத்து பாலிதீன் பையின் அடிபாகத்தை கிழித்து நடவு செய்யவும். 15 நாட்களுக்கு பின், நன்றாக வளரும் செடியை விட்டு விட்டு மற்றொரு செடியை களைந்தெடுக்கவேண்டும்.

நடவு செய்த 20 முதல் 30 நாட்களுக்குப்பின், செடியின் நுனியை கிள்ளுவதால் கிளைகள் எண்ணிக்கை அதிகமாகி மகசூல் அதிகரிக்கும். இந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற லாம். இவ் வாறு உதவி இயக்குனர் செல்வி தெரிவித்துள் ளார்.

---